செய்தி வெளியீடு எண்.139 நாள் 07.03.2017

# திருவள்ளூர் மாவட்டம் ஆரணி, கால்நடை மருந்தகத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக உலர் தீவனம் மானிய விலையில் வழங்கும் நிகழ்ச்சியினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் துவக்கி வைத்தார்.

~~~~~

திருவள்ளூர் மாவட்டம் ஆரணி, கால்நடை மருந்தகத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக உலர் தீவனம் மானிய விலையில் வழங்கும் நிகழ்ச்சியினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.03.2017) துவக்கி வைத்து கூறியதாவது

தமிழகத்தில் நிலவும் வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்பை கருத்தில் கொண்டு கால்நடைகளுக்கு உலர் தீவனம் மானிய விலையில் வழங்குவதற்காக தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் இதன் பொருட்டு, கடம்பத்தூர், பூண்டி, பெரியபாளையம், திருத்தணி, ஆர்.கே.பேட்டை, பாண்டேஸ்வரம், ஆரணி, கும்மிடிபூண்டி ஆகிய 8 இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களில் உலர் தீவன கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளிசந்தையில் இருந்து வாங்கப்படும் உலர்தீவனத்தை கால்நடை வளர்ப்போருக்கு ஒரு கிலோ ரூ.2 வீதம் வழங்கப்படுகிறது. ஒரு கால்நடைக்கு ஒரு நாளுக்கு 3 கிலோ தீவனம் வீதம், அதிகபட்சமாக 5 கால்நடைகளை வளர்க்கும் விவசாயிக்கு ஒரு வாரத்திற்கான 105 கிலோ உலர் தீவனம் வழங்கப்படும். கால்நடை வளர்ப்போர்கள் ஒரு வாரத்திற்கு தேவையான உலர்தீவனத்தை மொத்தமாக பெற்றுக் கொள்ளலாம். கால்நடை வளர்போர் தங்கள் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை காண்பித்து இச்சலுகையினை பயன்படுத்தி கொள்ளலாம்.

இதற்காக திருவள்ளூர் மாவட்டத்திற்கு ஒரு உலர்தீவன கிடங்கிற்கு ரூ.18.27 லட்சம் வீதம் , 8 கிடங்குகளுக்கு ரூ. 1 கோடியே 48 இலட்சத்து 56 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் வறட்சியின் காரணமாக ஏற்படும் அழற்சியை போக்க தாது உப்பு கலவைகளும் வழங்கப்படுகிறது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), மரு.இராமமூர்த்தி மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புதுறை), மரு.முகமது இக்பால் துணை இயக்குநர் (கால்நடை பெருக்கம்), கால்நடை மருத்துவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~